**Starting time 11.33.A.M.**

# IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.

## O.S. No.6/2025

Deposition of **D.W.3** witnesses for defendant Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 03.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **தனஜெயன்** Father's Name : **மணி**

Address : கதவு எண். 155, மதுரா காந்தி நகர்,
வேடல் கிராமம், அரக்கோணம் வட்டம்.

Age : 35

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால், தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து அவைகள் உண்மை என்பதால் தான் கையெழுத்து செய்தேனா என்றால், ஆமாம். எனது அம்மா பெயர் என்னவென்றால், தெய்வானை ஆகும். எனது அம்மா இவ்வழக்கில் 9–ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால், சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 4–ம் பிரதிவாதி எனது தாயார் எனவும், 9–ம் பிரதிவாதியை எனது சித்தி என சொல்லியுள்ளதும் சரியா, தவறா என்றால், தவறாகும். எனவே, எனது பிரமாண வாக்குமூலத்தை நான் படிக்காமல் தான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால், சரியல்ல, படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன்.

2. இவ்வழக்கின் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே மொத்தம்

எத்தனை வழக்குகள் நடந்து வருகிறது என தெரியுமா என்றால், தெரியாது. யார் தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், வளர்மொழி தாக்கல் செய்துள்ள வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். வளர்மொழியின் தாயார் எனது சித்தி என்றால், சரிதான்.

3. பாலகிருஷ்ணனுக்கும், வளர்மொழிக்கும் எப்போது திருமணமானது என்றால், 2009-ம் ஆண்டு நடந்தது, தேதி, மாதம் தெரியவில்லை. எவ்வளவு காலம் அவர்கள் ஒன்றாக வசித்து வந்தார்கள் என்றால், அது பற்றி தெரியவில்லை. நான் வேடல் கிராமம், காந்திநகரில் வசிக்கிறேன் என்றால், சரிதான். பாலகிருஷ்ணனுக்கும், வளர்மொழிக்கும் திருமணமான பிறகு அவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வரவில்லை என்றால், சரியல்ல, ஒன்றாக தான் வாழ்ந்து வந்தார்கள். நான் சொல்வது பொய் என்றும், வளர்மொழி எனக்கு சித்தி மகள் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

4. வளர்மொழிக்கு 2-வது திருமணம் எப்போது நடந்தது என்றால், நினைவில் இல்லை. பாலகிருஷ்ணன் ஊரை விட்டு சென்றுவிட்டார் என்றால், சரிதான். அவர் ஊரை விட்டு போன எவ்வளவு காலத்திற்கு பிறகு வளர்மொழி 2-வது திருமணம் செய்துக் கொண்டார் என்றால், 2 வருடத்திற்கு பிறகு 2-வது திருமணம் செய்துக் கொண்டார்.

5. எனது வாக்குமூலத்தில் வளர்மொழியின் 2-வது திருமணத்தை நடத்தி வைத்ததே எனது தாத்தா ரத்தினவேலு தான் என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வளர்மொழி தாக்கல் செய்த வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்று தெரியுமா என்றால், தெரியவில்லை. எவ்வளவு விஸ்தீரண சொத்துக்கள் என்பதாவது தெரியுமா என்றால், தெரியாது.

6. எனது தாத்தா வளர்மொழிக்கு எழுதி வைத்ததாக சொல்லும் செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால், எழுதும் போது நான் உடனிருந்தேன், ஆனால் பத்திரத்தை படித்து பார்க்கவில்லை. ஒரே நாளில் எனது தாத்தா 5 செட்டில்மெண்ட் பத்திரங்களை எழுதி வைத்ததாக சொல்வதால், அந்த ஆவணங்கள் எதிலாவது நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால், இல்லை. எனது தாத்தா செட்டில்மெண்ட் பத்திரங்களை எழுதிய போது நான் உடன் சென்றதாக சொல்வதே பொய் என்றால், சரியல்ல.

7. வளர்மொழி பெயருக்கு எனது தாத்தா செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்த போது, அந்த சொத்துக்களுக்கான மூலப் பத்திரங்களை வளர்மொழியிடம் எனது தாத்தா கொடுத்தாரா என்றால், அது பற்றி தெரியவில்லை.

8. எனது அம்மா, சித்தி மற்றும் அவர்களது உடன்பிறந்தவர்களில் யார் அதிகமாக படித்துள்ளது என்றால், எனது மாமா பாலகிருஷ்ணன் மட்டும் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளார், மற்றவர்கள் கையெழுத்து மட்டும் தான் செய்வார்கள், அதிகமாக படிக்கவில்லை. எனது தாத்தா உயிருடன் இருந்த வரை என்னுடன் பேச்சுவார்த்தை இருந்ததா என்றால், ஓரளவு இருந்தது. எனது தாத்தா உயிருடன் இருந்தவரை எனது அம்மா மற்றும் சித்தியுடன் பேச்சு வார்த்தை இருந்ததா என்றால், இருந்தது.

9. எனது தாத்தாவின் மகன்கள் துண்டிவிட்டு இவ்வழக்கை எனது தாத்தா தாக்கல் செய்துள்ளதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால், அந்த விவரத்தை எனது தாத்தா எங்களிடம் சொன்னாரா என்றால், சொன்னார். என்னிடம் மட்டும் சொன்னாரா அல்லது எனது அம்மா மற்றும் சித்தியிடமும் சொன்னாரா என்றால், என்னிடமும், எனது அம்மாவிடமும் சொன்னார், சித்தியிடம் சொன்னாரா என்று தெரியவில்லை.

10. என்னிடம் சொன்ன போது எனது தாத்தாவிடமிருந்து அவரது மகன்கள்

மிரட்டுகிறார்கள் என்று சொல்லி எனது தாத்தாவிடமிருந்து எதுவும் எழுதி வாங்கிக் கொண்டேனா என்றால், இல்லை. அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என எனது தாத்தாவை அழைத்தேனா என்றால், புகார் கொடுக்கலாம் என சொன்ன போது பேசி தீர்த்துக் கொள்ளலாம் என சொல்லிவிட்டார். எனது தாத்தாவை, அவரது மகன்கள் மிரட்டி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல.

11. வளர்மொழி பெயரில் எனது தாத்தா செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருந்தாலும், அதில் இருந்த சொத்துக்களை எனது தாத்தா தான் அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல, வளர்மொழி தான் அனுபவித்து வந்தார். இன்றுவரை வளர்மொழி தான் அனுபவித்து வருகிறாரா என்றால், இல்லை, எனது தாத்தா செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த இரண்டு கந்தாயம் வரை, அதாவது ஒரு ஆண்டுக்குள் வரை வளர்மொழி பயிர் செய்து வந்தார், அதன் பிறகு அவரிடமிருந்து பாலகிருஷ்ணன், நரசிம்மன், குணசேகரன் ஆகியோர் துராக்கிருதமாக சொத்தை பறித்துக் கொண்டார்கள்.

12. வளர்மொழியிடமிருந்து மேற்படி நபர்கள் சொத்தை பறித்துக் கொண்டதாக சொல்வதால், அவர்கள் மீது வேலூர் மாவட்ட நில அபகரிப்பு பிரிவில் வளர்மொழி புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால், தெரியும். மேற்படி புகாரை யார், யார் மீது கொடுத்தார் என்றால், குணசேகரன் மற்றும் நரசிம்மன் பெயரில் கொடுத்தார். என தாத்தா மீதும் புகார் கொடுத்தாரா என்றால், அது பற்றி தெரியவில்லை.

13. எனது தாத்தா வளர்மொழிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் யார், யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளது என்றால், நரசிம்மன், குணசேகரன், தெய்வானை, ராஜம்மாள் ஆகிய 4 பேர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். அவர்களை தவிர வேறு யாரும் சாட்சி கையெழுத்து செய்யவில்லையா என்றால், ஆமாம். மேற்படி 4 பேரை தவிர வேறு நபர்களும் சாட்சி கையெழுத்து

செய்துள்ளார்கள் என்றால், அது பற்றி தெரியவில்லை.

14. எனது தாத்தா உயிருடன் இருந்த போது ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால், அது பற்றி தெரியவில்லை. எனது தாத்தா எந்த தேதியில் காலமானார் என்றால், 30.12.2020 அன்று காலமானார். என் தாத்தா இறப்பதற்கு முன்பு படுத்த படுக்கையாக இல்லாமல் திடீரென தான் காலமாகிவிட்டார் என்றால், சரியல்ல, இரண்டு மாதம் படுத்த படுக்கையாக தான் இருந்தார். அதற்காக சிகிச்சை எதுவும் அளித்தோமா என்றால், உள்ளூரிலேயே சிகிச்சை அளித்தோம். அதுபோல் உள்ளூரிலேயே சிகிச்சை அளித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. எனது தாத்தா காலமாகுவதற்கு முன்பு படுத்த படுக்கையாக இருந்ததாக சொல்வது பொய் என்றும், திடீரென தான் காலமாகிவிட்டார் என்றால், சரியல்ல.

15. எனது தாத்தா எழுதி வைத்த உயிலை பார்க்காமல் தான் அது மோசடியானது என சொல்கிறேன் என்றால், சரியல்ல. எனது தாத்தா எழுதி வைத்த உயில் மோசடியானது என சொல்வது அப்பட்டமான பொய் என்றால், சரியல்ல. உயிலை வரைவு செய்தவர் இருதரப்பிற்கு விரோதம் இல்லாத ஒரு வழக்கறிஞர் தான் என்றும், எனவே, உயில் மோசடியானது என சொல்வது பொய் என்றால், சரியல்ல.

16. வளர்மொழிக்கு எழுதி வைத்த சொத்துக்களில் பாலகிருஷ்ணன் அனுபவத்திறகு வந்தார் என சொல்வதால், அதுபோல் எப்போது அனுபவத்திற்கு வந்தார் என்றால், தேதி, மாதம் தெரியாது, ஆனால் எனது தாத்தா காலமான பிறகு அனுபவத்திற்கு வந்தார். வளர்மொழி பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி அதில் உள்ள சொத்துக்களின் அனுபவத்திற்கு வளர்மொழி வரவே இல்லை என்றும், அந்த ஆவணத்தில் உள்ள சொத்துக்களை எனது தாத்தா அவரது காலம் வரை அனுபவித்து வந்து, அவர் காலமான பிறகு அவர் எழுதி வைத்த உயில் சாசனம் படி அனுபவித்து வரப்படுகிறது என்றால், சரியல்ல.

**வளர்மொழி எனது சித்தி மகள் என்பதால், அவருக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.**

Ending time : 12.14 P.M.

YUVARAJ
Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.03 18:20:03 +0530